15th December 1961]

கிறார்கள். இதனால் 5 எக்கருக்குள் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலங்களை அக்வையர் செய்யக்கூடாதென்று சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஐந்து எக்கருக்குள் இரண்டரை எக்கர் வரையிலுள்ள நிலங்களை அக்வையர் செய்யக்கூடாதென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

Deaths due to rain

* 2360 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN :
SRI A. A. RASHEED : } கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது ராஜ்யத்தில் சமீபத்தில் மழையின் காரணமாக உயிரிழந்தவர்கள் எத்தனை பேர் ? ஜில்லாவாரியாக ?

THE HON. SRI M. A. MANICKAVELU :

Number of human beings who lost their lives on account of recent rains

Tirunelveli	4
Coimbatore	6
The Nilgiris	17
Kanyakumari	1

SRI V. K. KOTHANDARAMAN : அவர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு கொடுக்கப்பட்டதா அல்லது கொடுப்பதற்கான ஏற்பாடு ஏதாவது உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது மழையினாலே வீடு சரிந்து வீழ்ந்ததுபற்றிய கேள்வி. இப்போது வீடுபற்றிக் கொண்டால் நஷ்டஈடு எவ்வளவு கொடுப்பது என்ற தகவலும் என்னிடம் இல்லை.

Sea-erosion

* 2361 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the extent of damage caused by sea-erosion in the Coastal Districts of the State last year;

(*b*) whether any permanent measures are contemplated by Government to check this erosion; and

(*c*) if so, cost of the same and the present stage at which the matter stands?

THE HON. SRI P. KAKKAN : (*a*), (*b*) & (*c*) A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix II on page 1092-1093 infra.